மனனம் செய்ய இந்த வார வசனம்:

“நீரே எனக்குப் புகலிடம்; இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர்”

(திபா. 32, 7)

புகழும் செல்வாக்குமிக்க இறைவாக்கினர்களைக் கண்டிருக்கும் யூத மக்கள்கூட, இவரைப் போல் ஒருவரைக் கண்டிருக்கவில்லை எனக் கூறினர். இயேசு செய்த அனைத்துச் செயல்களும் அவரது சொந்த புகழுக்காக மகிமைக்காக செய்யவில்லை. இதுவே இயேசுவின் அன்பின் தன்மை. அவரது அன்பு தியாகமிக்க, புனிதமான அன்பு. மற்றவர்களை நலம்பெறச் செய்யும் அன்பு. ஆயினும் இவ்வுலக மனித வாழ்வின் இறுதியில், அவர் சிலுவையில் அறையப்பட்ட போது அவர் மீது கொண்டிருந்த அன்பும் மதிப்பும் பறந்து விட்டது.

இயேசுவின் காலத்தில் யூதர்கள் நடந்து கொண்டது போல நாம் எத்தனை முறை நடந்து கொண்டிருக்கிறோம்? நமது வாழ்க்கைப் படகு அமைதியாக செல்வதால் நாம் திருப்தியும் நிம்மதியும் கொள்கிறோம். அதே சமயத்தில் சிக்கல்கள் ஏற்படும் போது பழியை மற்றவர்கள் மீது போடுகிறோம், ஏன் கடவுளையே திட்டுகின்றோம். பிறர் மீது பழி போடுவது எளிது. இறைமன்றாட்டில் அமைதியாகவும் தாழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். யாரையும் தீர்ப்பிடக்கூடாது என இயேசு கூறிய வார்த்தையை நாம் அறிந்திருந்தாலும், அதனைக் கடைபிடிப்பது கடினமாக இருக்கிறது. அன்றாடம் செய்யும் செயல் நமது பழக்கமாக மாறி, அதே பழக்கம் நமது குணமாக மாறிவிடும். இல்லையென்றால், கடவுளைத் திட்டுவதும் பிறர் மீது பழி போடுவதும் நமது பழக்கமாக மாறிவிடும். “அவனைவிட நான் சிறந்தவன்” அல்லது “நான் எப்போதும் சரி” என்ற மனநிலைக்கு நாம் தள்ளப்படுவோம். அதுவே நமது அன்றாட வாழ்க்கையில் பழக்கமாகி விடும்

இன்று உலகம் “வெலன்டய்ன்” அல்லது காதலர் தினத்தைக் கொண்டாடும் வேளையில், உண்மை (அன்பு) காதலின் அர்த்தத்தை இயேசு நமக்கு நினைவுப்படுத்துகிறார். தாழ்ச்சியும் கீழ்படிதலும் முக்கியம். “ஆண்டவர் எந்த மனிதரின் தீச்செயலை எண்ணவில்லையோ, எவரது மனதில் வஞ்சம் இல்லையோ, அவர் பேறுபெற்றவர்”(திபா.32:2) போன்ற மனநிலையை கடவுள் மீது கொண்டிருக்க வேண்டும். உலக செல்வாக்கையும் புகழையும் நாடுவதில் அதிக நாட்டம் செலுத்த வேண்டாம் என இயேசு அறிவுறுத்துகிறார். நமது நம்பிக்கைப் பயணத்தைப் பொறுமையோடு மேற்கொள்வோம். பிறருக்காக நம்மையே தியாகம் செய்யத் தூண்டும் அன்பையே இயேசு போதிக்கிறார். இதுவே உண்மை அன்பின் நிதர்சனம்.

**இன்றைய வாசகங்கள்:**

லேவி. 13, 1-2. 44-46;

திபா. 31, 1-2. 5. 11.

1கொரி. 10, 31 – 11, 1.

மாற்கு 1, 40-45.

INTERNAL CIRCULATION ONLY
BUL 07/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

14 பிப்ரவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 6ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **வேற்றுமையில் ஒற்றுமை**



# அவர்கள் அவரைச் சூழ்ந்தனர்

இவ்வுலகில் இயேசு வாழும் போது மக்களிடையே அவர் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதை பெரும்பாலும் நாம் மறந்து விடுகிறோம். ஆனால் என்ன, அந்த செல்வாக்கின் புகழுக்கு அவர் நீண்ட காலம் வாழவில்லை. இன்றைய உலகில், புகழை விரும்பாமல் பெரிய-பெரிய செயல்களைச் செய்யும் மனிதர்களைப் பார்ப்பது சற்றுச் சிரமமாக இருக்கிறது. “எனது செயல்களைக் காட்டுகிறேன், நீ என்னை வணங்கு”. எங்கோ கேட்ட மாதிரி இருக்கிறதா? இயேசுவின் போதனையைக் கேட்டு-பார்த்தப் பின்னரும் மேலும் அருஞ்செயல்களையும் குணமளிப்பையும் அவர் செய்ய வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். அதிசயத்தக்க மனிதரின் அசாத்திய செயல்களால் மக்கள் நிலையற்றத் திருப்தி கொள்கின்றனர்.